முருகப்பெருமான் துணை

**மகான் குருராஜர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.10.2022**, வியாழக்கிழமை

1. தருமராஜனே அரங்கா போற்றி
தவராஜனே தேசிகா போற்றி
ஆறுமுகனாரின் அவதார ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா தசதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10 ம் நாள் 27.10.2022, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் குருராஜர் யானும்
தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை உலகோர் ஞானம்பெற
அரங்கன் வழியை மக்கள் ஏற்று
ஆசிபெற்று தீட்சை பலமும் அடைய
அருளுவேன் சன்மார்க்க நெறிதனை
4. நெறியதுவும் நீதிவழி காட்டும்
நிலவுலகின் உயர் வழியாகும்
அறியாமை போக்கி ஞானபலம்
அறிவுத் தெளிவு கொண்ட நெறி
5. நெறிபிறழா வாழ்வைக் காணவே
நெஞ்சமதில் அரங்கன் நாமசெபம்
தெரிவிப்பேன் வேதமாகக் கூறி
தேசிகன் தருமவழிகள் தனையும்
6. தனையும் கட்டாய சேவையாகவே
தரணியோர் உறுதிபட செய்துமே
அனைத்து திக்கிலும் அன்னதானமும்
அளவிலா செய்து பெருக்கவே
7. பெருக்கவே உலகம் எங்கிலும்
பெருமை மிக்க ஞானிகள் படை
கருத்தாக அரங்கனால் உருவாகி
கலியுகம் ஞானயுக மாற்றம் காணும்
8. காணவே அரங்கன் சக்தி
கலிஇடரை வெல்லும் வண்ணம்
ஞானமாகக் குருவருளாகவே
ஞாலமதில் சித்திகள் நிரம்பி
9. நிரம்பியே ஞானவான்கள் தலைமை
நிலவுலகம் இலகுவாகக் கண்டு
வரம்பல மகானிவர்க்கு துணைவரும்
வல்லமைகொண்டவர்களாகத் தேறி

10. தேறியே ஞானயுக மாற்றம்
தேசிகனால் நடந்தேறுமென்பேன்
அறிவுத் தெளிவு சகல வளமும்
அய்யன் முருகப்பெருமானால் இனிதே
11. இனிதே அனைத்தும் சித்தியாகி
எங்கும் எதிலும் ஆற்றல்பட
கலிவேலவன் சித்திகளாகியே
கலியில் ஞானம் தவம் சர்வ பலமும் அடைவர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–